**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**முதலாம் தவணைப் பரீட்சை - 2021**

# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 1st Term Examination - 2021

FWC

| தமிழ் Tamil | Three Hours / Gr -12 (2022) | 72 | T | I,II |
|---|---|---|---|---|

❖ **பகுதி I இல் மூன்று வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ள இரு வினாக்களுக்குமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி I

1) **பின்வரும் செய்யுள்களை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

கன்றுதன் பயமுலை மாந்த முன்றிற்
றினைபிடி யுண்ணும் பெருங்கல் நாட
கெட்டிடத் துவந்த உதவி கட்டில்
வீறு பெற்று மறந்த மன்னன் போல
நன்றி மறந்தமை யாயின், மென்சீர்க்
கலிமயிற் கலாவத் தன்ன விவள்
ஒலிமென் கூந்த லுரியவால் நினக்கே.

i) இச்செய்யுளின் திணையையும் துறையையும் விளக்குக.
ii) இச்செய்யுளில் தோழியின் மதிநுட்பம் வெளிப்படுமாற்றை விளக்குக.
iii) இச்செய்யுளினூடாகப் புலப்படும் சங்ககால அகத்திணைப் பண்புகளை விளக்குக.
iv) இச்செய்யுளில் இடம்பெறும் அணியை இனங்கண்டு விளக்குக.
v) இச்செய்யுளில் இறைச்சிப்பொருள் வெளிப்படுமாற்றை விளக்குக.

(5x4=20 புள்ளிகள்)

2) **ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

1. பின்வருவனவற்றுள் கடையண்ண வெடிப்பொலி.
   1) க் 2) ச் 3) ட் 4) த் 5) ப் (..........)

2. பின்வருவனவற்றுள் ஆடொலி.
   1) ர் 2) ள் 3) வ் 4) ங் 5) ற் (..........)

3. கூட்டுயிர்களாக அமைவன.
   1) ஆ இ 2) ஊ ஔ 3) ஐ இ
   4) ஔ உ 5) ஐ ஔ (..........)



kalvi.lk

4. பின்வருவனவற்றுள் 'ச' கரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்

1) பச்சை 2) கட்சி 3) பயிற்சி 4) சோறு 5) பட்சி (..........)

5. பின்வருவனவற்றுள் 'ஏ' வேறுபட்டு ஒலிக்கும் சொல்.

1) ஏர் 2) ஏடு 3) ஏழு 4) ஏணி 5) ஏறு (..........)

6. நன்னூல் கூறும் சார்பெழுத்துக்களின் வகைகள்.

1) 02 2) 10 3) 04 4) 06 5) 08 (..........)

7. பின்வருவனவற்றுள் நெடிற்றொடர்க் குற்றியலுகரம்.

1) தெரியாது 2) புரியாது 3) யாது 4) முடியாது 5) விடியாது (..........)

8. பின்வருவனவற்றுள் ஒற்றளபெடை இடம் பெற்ற சொல்.

1) நசைஇ 2) தொழாஅள் 3) இலங்ங்கு

4) கழா அக்கால் 5) ஊஉதாஅ (..........)

9. சொல்லின் இறுதியில் இடம்பெறாத உயிரெழுத்து.

1) ஈ 2) ஊ 3) எ 4) ஐ 5) ஓ (..........)

10. தமிழிலுள்ள குறிலெழுத்துக்களின் எண்ணிக்கை.

1) 05 2) 07 3) 30 4) 90 5) 95 (..........)

(10 x 2 = 20 புள்ளிகள்)

3) **பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிவு செய்து 300 – 350 சொற்களில் ஒரு கட்டுரை எழுதுக.**

அ) மாணவர்களின் மொழிவிருத்தியில் ஊடகங்களின் பங்களிப்பு.

ஆ) தமிழர் வாழ்வில் கொவிட் - 19 ஏற்படுத்திய தாக்கங்கள்.

இ) போதைப்பொருள் வியாபாரமும் அதன் விபரீதமும்.

ஈ) மனித வாழ்வில் இறைநம்பிக்கை

உ) உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்.

(20 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

4) சுவாமி விபுலானந்தரின் தமிழ்த்தொண்டு என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) தமிழின் பெருமைகள்.

ஆ) தமிழ்மொழியை வளர்ப்பதற்குச், செய்ய வேண்டியவை என விபுலானந்தர் கூறியவை.

இ) சுப்பிரமணிய பாரதியாரிடம் விபுலானந்தர் கண்ட சிறப்பு.

*(20 புள்ளிகள்)*

5) அ) சங்ககால இலக்கியங்களைத் தொகுப்பு அடிப்படையில் வகைப்படுத்துக.

அ) சங்க இலக்கியங்களின் பொருள் மரபு சார்ந்த பண்புகளை விளக்குக.

ஆ) குறுந்தொகையில் 'தோழி' என்ற பாத்திரம் பெறும் இடத்தை மதிப்பிடுக.

(20 புள்ளிகள்)

6) அ) சங்ககாலத்தில் எழுந்த புறத்திணை இலக்கியங்களை எடுத்துக்காட்டுக.

ஆ) புறத்திணை இலக்கியங்களின் பண்புகளை விளக்குக.

இ) காஞ்சித்திணை, பாடாண்திணை என்பவற்றை விளக்குக.

*(20 புள்ளிகள்)*

7) அ) சங்ககாலத்தில் எழுந்த அகத்திணை இலக்கியங்களை எடுத்துக்காட்டுக.

ஆ) அகத்திணை இலக்கியங்களின் பண்புகளை விளக்குக.

இ) கைக்கிளை, பெருந்திணை என்பவற்றை விளக்குக.

*(20 புள்ளிகள்)*

8) அ) சங்ககாலத்தில் எழுந்த ஆற்றுப்படை இலக்கியங்கள் எவை?

ஆ) அவற்றின் பண்புகளை விளக்குக.

இ) திருமுருகாற்றுப்படை ஏனைய ஆற்றுப்படை இலக்கியங்களிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது?

*(20 புள்ளிகள்)*



kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page